(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தம்மம்பட்டி கிராமத்தில் 110/22 கி.வோ. மின் அழுத்தமுள்ள துணை மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத்துணைமின் நிலையம் அமைப்பதற்கு தம்மம்பட்டிக்கு அருகில் உள்ள நாகையம்பட்டி கிராமத்தில் நிலம் தெரிவு செய்யப்பட்டு, நிலத்திற்குரிய மதிப்பீட்டுத் தொகை தமிழ்நாடு வருவாய்த் துறைக்குச் செலுத்தப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப் பட்டவுடன், 1990-91 ஆம் ஆண்டில் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டு அவ்வாண்டே முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. எஸ். குணசேகரன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறியதற்கு நன்றி. இந்தத் திட்டத்தின் மதிப்பு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாதான் கேட்க வேண்டு மென்று முதலிலேயே சொல்லி இருக்கிறேன்.

திரு. எஸ். குணசேகரன் : திட்டத்தின் மதிப்பு எவ்வளவு? விரைவில் தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பு ரூபாய் 196.95 இலட்சம் ஆகும். இது 1990 ஆம் ஆண்டில் தொடங்கி அந்த ஆண்டிலே முடிவுறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

தமிழ்நாடு இறைச்சிக் கழகம்.

*4885. திரு. துரை சந்திரசேகரன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு இறைச்சிக் கழகம் அமைத்துள்ள நோயற்ற மண்டலங்களிலிருந்து வரும் பிராணிகளிலிருந்து கிடைக்கும் இறைச்சி எந்தெந்த நிறுவனங்கள் மூலம் ஏற்றுமதி செய்யப் படுகிறது?

(ஆ) அரசு மருத்துவமனைகள், பள்ளி, கல்லூரி விடுதிகள் ஆகியவற்றிற்கு இறைச்சிக் கழகம் மூலம் இறைச்சி வாங்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு இறைச்சி நிறுவனம் நோயற்ற மண்டலங்கள் ஏதும் அமைக்கவில்லை. அரசுக்குச் சொந்தமான எந்த நிறுவனமும் இறைச்சி ஏற்றுமதியில் இன்னமும் ஈடுபடவில்லை. இறைச்சி ஏற்றுமதி தற்போது தனியார் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஆ) அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளுக்கு இறைச்சி நிறுவனம் மூலம் இறைச்சி வழங்க முடிவு செய்துள்ளது. கூடிய விரைவில் இவ்விடுதிகளுக்கு இறைச்சி நிறுவனம் மூலம் இறைச்சி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-20 மணி

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இறைச்சிக் கழகத்தின் மூலம் உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அன்னியச் செலாவாணியைப் பெறுகின்ற வகையில் வெளிநாடுகளுக்கு இறைச்சி ஏற்றுமதி செய்யவும் திட்டம் அரசிடம் உள்ளதா? அரசு அதற்கு விலை நிர்ணயம் செய்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவரவர்களே, இறைச்சி ஏற்றுமதி செய்யும் திட்டம் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன்: தலைவரவர்களே, நட்சத்திர உணவு விடுதிகள், அரசு சுற்றுலா மையவிடுதிகள் போன்றவற்றில் தமிழ்நாடு கோழி வளர்ப்புக் கழகம் விற்பனை செய்வதைப் போல தமிழ்நாடு இறைச்சிக் கழகமும் விற்பனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவரவர்களே, தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் மூலமாகத் தற்சமயம் நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் பல்வேறு வகையான எல்லா ஹோட்டல்கள் இறைச்சி பெறுவதற்கு வருவார்களே யானால் அவர்களுக்கு விநியோகிப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.